**வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி முகாம்**

First Published : 06 Nov 2010 10:22:30 AM IST

நாமக்கல், நவ. 4: வெள்ளாடு வளர்ப்பில் நோய்க் கட்டுப்பாடு முறைகள் தொடர்பாக நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் இலவசப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் இயங்கும் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் விவசாயிகளுக்காவும், தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தவும் பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. வரும் நவ. 11-ம் தேதி வெள்ளாடு வளர்ப்பில் நோய் கட்டுப்பாடு முறைகள் எனும் தலைப்பில் இலவசப் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

இதில், வெள்ளாடுகளைத் தாக்கும் நோய்கள், நோய் அறிகுறிகள், நோய் மேலாண்மை, தடுப்பூசி செலுத்தும் முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

வெள்ளாடுகளைத் தாக்கும் துள்ளுமாரி மற்றும் சார்பு வெக்கை நோய்கள் குறித்தும், அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் விளக்கப்படும். விவசாயிகள், ஊரக மகளிர், தொழில் முனைவோர், இளைஞர்கள் அனைவரும் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், வேளாண்மை அறிவியல் நிலையம், கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகம், நாமக்கல் (தொலைபேசி 04286- 266345, 266244) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு, வரும் 10-ம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும்.

**காளான் வளர்ப்புப் பயிற்சி**

First Published : 05 Nov 2010 12:47:39 AM IST

சென்னை, நவ. 4: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் காளான் வளர்ப்பு பயிற்சி நவம்பர் 12-ல் நடைபெறவுள்ளது.

வீட்டிலிருப்போர், மாணவர்கள், தொழில் முனைவோர், வியாபாரிகள் என அனைவரும் இதில் பங்கேற்கலாம். பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.


மேலும் விவரங்களுக்கு:

நகர்ப்புறத் தோட்டக்கலை வளர்ச்சி மையம், எண்:44, ஆறாவது அவென்யு, அண்ணாநகர், சென்னை-40.

தொலைபேசி: 044-2626 3484, 4217 0506.

**ஆந்திரத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தப்படும் கார்ப்பரேட் விவசாயம்!**

First Published : 04 Nov 2010 12:00:00 AM IST




சிதம்பரம்: இந்தியாவில் வேளாண் வளர்ச்சியில் ஆந்திர மாநிலம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

÷ஆந்திர மாநிலத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 6.8 சதவீதத்திலிருந்து உணவு தானிய உற்பத்தி 8.9 சதவீதமாக உயர்ந்துள்ளது.

÷அதிகளவு மத்திய, மாநில வேளாண் திட்டங்களில் முதலீடுகள், அதிகளவு தனியார் துறையின் பங்களிப்பு போன்றவைதான் வேளாண் வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும்.

÷பல புதிய வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் செயல் திட்டங்களை உருவாக்கி வெற்றிகரமாக விவசாயிகள் தங்களது நிலங்களில், தோட்டங்களில் பண்ணைகளில் நடைமுறைப்படுத்தி அதிகளவு உற்பத்தி பெற்று லாபம் பெற்று வருகின்றனர்.

÷இத்தகைய நடைமுறைகளை தமிழக விவசாயிகள், வேளாண் பட்டதாரிகள், தனியார் வேளாண் நிறுவனங்கள் இணைந்து செயல்படும்போது மிகப்பெரிய அளவில் வேளாண் உற்பத்தியை நாம் பெருக்கச் செய்ய முடியும்.

÷இது குறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்தது:

÷"ஆந்திர மாநில வேளாண்துறையில் தமிழகத்தை போன்று ஆள்பற்றாக்குறை, வேளாண் இடுபொருள்கள் விலைஉயர்வு, குறைந்த மகசூல், வெள்ளம், வறட்சி உள்ளிட்ட பிரச்னைகள் வேளாண்துறையை வீழச்சிக்கு கொண்டு சென்றது.

÷இத்தகைய நடைமுறை பிரச்னையை ஒரு வாய்ப்பாக கருதி ஆந்திர மாநில அரசு, விவசாயச் சங்கங்கள், தனியார் வேளாண் நிறுவனங்கள் இணைந்து கார்ப்பரேட் விவசாயம் என்ற புதிய வேளாண் செயல்திட்டத்தை வகுத்தது.

÷அதன் வாயிலாக பல புதிய வேளாண்மை தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து விவசாயிகள் அதிகளவு மகசூல் மற்றும் லாபம் பெற உதவி செய்கிறது.

÷இந்த புதிய செயல் திட்டத்தில் விவசாயிகளின் நிலங்களை உழவு செய்தல், நாற்றுநடுதல், களை எடுத்தல், பயிர்பாதுகாப்பு உள்ளிட்ட பணிகளை தனியார் வேளாண் நிறுவனங்களே செய்து விடும்.

÷விவசாயிகளின் நிலத்தின் அளவுக்கு ஏற்பவும், பணிகளுக்கு ஏற்பவும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. குறிப்பாக விவசாயிகளின் நிலங்களில் நடவு செய்வதற்கு ரூ. 4500 வரை கட்டணம் வசூலிக்கிறது.

÷அதே போல் ஒவ்வொரு வேளாண் பணிகளுக்கும் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு விவசாயிகளிடம் பெறப்படுகிறது.

÷வேளாண் நிறுவனங்கள் புதிய வேளாண் பண்ணை கருவிகள் கொண்டும், புதிய தொழில்நுட்பங்கள் கொண்டும் செயல்படுத்தி வேளாண் பணிகளை செய்து முடிப்பதுடன், விவசாயிகளுக்கு தேவையான மண் மற்றும் நீர்ப் பரிசோதனை செய்து அதற்கேற்ப வேளாண் இடுபொருள்களை சந்தை விலையில் விவசாயிகளின் நிலங்களில் நேரடிய தந்து தங்களின் வேளாண் சேவையை விவசாயிகள் தேவைக்கேற்ப நிறைவு செய்கிறது.

÷இந்த புதிய வேளாண் செயல் திட்டம் வாயிலாக விவசாயிகளின் விலை பொருள்களை தகுந்த நேரத்தில் விற்பனை செய்து அதிக லாபம் பெறும் விற்பனை ஆலோசனைகளையும் விவசாயிகளுக்கு அந்த தனியார் நிறுவனங்கள் வழங்குகின்றன' என்றார் தி.ராஜ்பிரவீன்.

÷தமிழகத்தில் உள்ள வேளாண் பட்டதாரிகள் ஒரு குழுவாக இணைந்து சில விவசாய தொழில்நுட்பப் பணியாளர்களை நேரடியாக பணிக்கு அமர்த்தி மத்திய, மாநில அரசுகள், வங்கிகள் தரும் மானிய விலையில் வழங்கும் உழவியல் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளை பெற்று சிறு, பெருவிவசாயிகள், பண்ணை மகளிருக்கு கட்டண அடிப்படையில் வேளாண் விரிவாக்க சேவைகளை வழங்கலாம்.

÷இதன் மூலம் வேளாண் பட்டதாரிகளுக்கு சுய வேலைவாய்ப்பு கிடைக்கும். இத் திட்டத்தின் மூலம் அதிகளவு மகசூல் பெருக்கும் முயற்சிகளில் ஈடுபடும் போது கிராமப்புற தமிழகம் பொருளாதார வளர்ச்சி பெறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. வேளாண் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் அதிநவீன கருவி

**வேளாண்மை அனுபவங்களை தேடி ஒரு இலவசப் பயணம்**

First Published : 04 Nov 2010 12:00:00 AM IST

காஞ்சிபுரம்: விவசாயம் செய்வதுடன் எவ்வாறு நேர்த்தியாக அறுவடை செய்வது, அறுவடை செய்த பொருள்களை பாதுகாப்பது, லாபத்தில் விற்பனை செய்வது ஆகியவை தொடர்பாக போதிய அனுபவங்கள் பெறும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளை சுற்றுலா அழைத்துச் செல்ல வேளாண் வணிகத்துறை முடிவு செய்துள்ளது.

÷நீர்வள, நிலவளத் திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில் இருந்து இச் சுற்றுலாவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாவின் முக்கிய அம்சமாக முன்னோடி விவசாயிகள் எவ்வாறு பயிர் செய்கின்றனர் என்பதை அவர்கள் நேரில் பார்க்க முடியும். அந்த விவசாயிகளின் அனுபவங்களை கேட்க முடியும்.

÷மேலும் விளைபொருள்களை எவ்வாறு பாதுகாக்கின்றனர், விற்பனை செய்கின்றனர் போன்ற விவரங்களை நேரில் அனுபவப்பூர்வமாக தெரிந்து கொள்ள முடியும். மேலும் பிரசித்தி பெற்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் விவசாயிகள் அழைத்து செல்லப்பட உள்ளனர். அங்கு எவ்வாறு வணிகம் நடைபெறுகிறது என்பதையும் விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம்.

÷இந்த சுற்றுலாவுடன் முன்னோடி விவசாயிகளை நேரில் வரவழைத்து அவர்கள் விவசாயம் செய்வது தொடர்பாக கலந்துரையாடலும், பயிற்சி அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளன. விவசாய விளைபொருள்களை எவ்வாறு அறுவடை செய்து பாதுகாப்பது என்பது குறித்து அறுவடை செய்நேர்த்தி பயிற்சிகளும் அளிக்கப்பட உள்ளன.

÷இது குறித்து வேளாண்மை வணிக துணை இயக்குர் கே. சம்பத் கூறியது:

விவசாயிகளுக்கு விவசாய சுற்றுலா மற்றும் அறுவடை செய் நேர்த்தி பயிற்சிகள், கலந்துரையாடல் போன்ற பயிற்சிகளை அளிக்க உள்ளோம். இந்த விவசாய சுற்றுலாவில் எவ்வாறு விவசாயிகள் தேர்வு குறித்து பின்னர் துறை அதிகாரிகளிடம் பேசி முடிவு செய்யப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடுகள் முடிந்துவிட்டன என்றார்.

÷இது குறித்தும், விவசாய பொருள்களை எவ்வாறு பாதுகாப்பது, எவ்வாறு லாபகரமாக விற்பனை செய்வது போன்ற விவரங்களை அறியவும் விவசாயத்துறை துணை இயக்குநர்(வணிகம்) அலுவலகத்தை 044-27231299 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தினமலர்

**கோபி பகுதியில் பலத்த மழை: நெல், வாழை, மஞ்சள் பயிர்கள் நாசம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2010,01:37 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டார பகுதியில் இடியுடன் கூடிய கன மழையால், சாகுபடி செய்யப்பட்ட நெல், வாழை, மஞ்சள் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின. இடி தாக்கியதில் கறவை மாடு ஒன்றும் இறந்தது. கோபி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. கோபி கீரிப்பள்ளம் ஓடை, சின்ன மொடச்சூர்

தரை மட்ட பாலம், பாரியூர் நஞ்சகவுண்டன்பாளையம் செல்லும் வழியில் உள்ள தரைமட்ட பாலம் ஆகிய இடங்களில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தரை மட்ட பாலத்தில் பெருக்கெடுத்த ஓடிய வெள்ளத்தால், வாகன ஓட்டிகள் செல்ல முடியாமல் பெரும் சிரமத்துள்ளாகினர். இதனால், அப்பகுதியில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. கோபியில் அதிகபட்சமாக 58 மி.மீட்டர் மழை பெய்தது.

வெளுத்து வாங்கிய மழையால், தடப்பள்ளி, அரக்கன் கோட்டை பாசன பகுதியில் பயிர் செய்யப்பட்ட நெல், மஞ்சள், வாழை ஆகிய பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின. புளியங்கோம்பை, குன்றி, கரலியம் போன்ற மலை பகுதியில் பெய்த மழையால், குண்டேரிப்பள்ளம் அணை நிரம்பி வழிகிறது. மேலும், பெருமுகை பஞ்சாயத்துக்குட்பட்ட சஞ்சீவராயன் குளம் நிரம்பும் தருவாயில் உள்ளது. கொங்கர்பாளையம் குண்டேரிப்பள்ளம் தோட்டத்தில் கட்டியிருந்த கறவை மாட்டை இடி தாக்கியதில் பரிதாபமாக இறந்தது. நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் மழையால், பவானிசாகர் அணைக்கு, விநாடிக்கு 7,158 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து பெய்து வரும் மழையால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**விவசாயிகள் பயனுக்காக ரூ.96 கோடியில் கடன்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2010,03:22 IST

ஊட்டி:நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம், ரூ.96 கோடிக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.நீலகிரி கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் தயாளன் கூறியதாவது:நடப்பாண்டு ஏப்ரல் முதல் அக்டோபர் 25ம் தேதி வரை, நகர கூட்டுறவு வங்கியின் மூலம் 24 கோடியே 44 லட்சம் மதிப்பில் நகைக்கடன், வீட்டு வசதிக்கடன், மகளிர் சிறு வணிகக்கடன், சுய உதவிக்குழு கடன் மற்றும் மகளிர் தொழில் முனைவோர் கடன் வழங்கப்பட்டுள்ளது. நீலகிரியில் உள்ள 75 தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு, 22 கோடியே 79 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய்க்கான மத்திய, மாநில அரசின் நிதி உதவி, மறு முதலீடு நிதியாக வழங்கப்பட்டுள்ளது. கடன் தள்ளுபடித் திட்டத்தின் கீழ், மாநில அரசு நிதியாக 86 கோடி, மத்திய அரசு நிதியாக 11 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம், ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் 25ம் தேதி வரை, 19 கோடி மதிப்பில் விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், விவசாய உபகரணங்கள் மற்றும் வேளாண் விளைப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம், 28 கோடியே 74 லட்சம் மதிப்பில், குறுகிய கால பயிர்க் கடன், 10 லட்சம் மதிப்பில் மத்திய காலக்கடன், 49 லட்சம் மதிப்பில் பண்ணை சாராக் கடன், 3 கோடியே 15 லட்சம் மதிப்பில் சுய உதவிக்குழு கடன், 72 லட்சம் மதிப்பில் சிறு வணிகக் கடன் மற்றும் 62 கோடியே 83 லட்சம் நகைக்கடன் என, மொத்தம் 96 கோடியே 5 லட்சத்து 73 ஆயிரம் மதிப்பில் கடன் வழங்கப்பட்டுள்ளது.ஐந்து தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம், விவசாயப் பயன்பாட்டு மையம் அமைக்கப்பட்டு செயல்படுகிறது. விவசாய பயன்பாட்டு மையங்கள் மூலம், விவசாய நிலங்களில் மண் பரிசோதிக்கப்பட்டு, நிலத்தின் குறைபாடுகளை நீக்க ஆலோசனை வழங்கப்படுகிறது. பத்து தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம், விவசாய சேவை மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு தேவையான உபகரணங்களான டிராக்டர் ட்ரில்லர் விசைத்தெளிப்பான், தேயிலை பறிப்பு இயந்திரம், குறைந்த வாடகைக்கு அளிக்கப்பட்டு வருகிறது. 12 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம், பொது சேவை மையங்கள் அமைத்து, கிராமப்புற மக்களுக்கு தேவையான தகவல் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன.மாவட்டத்தில் செயல்படும் மத்திய கூட்டுறவு மற்றும் கூட்டுறவு நகர வங்கிகள் கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்டு, விரைவான சேவை அளித்து வருகிறது.

தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், கம்ப்யூட்டர் மயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான புதிய கட்டடம், கிடங்கு மற்றும் வளர்ச்சிக்கு தேவையான கடன் மற்றும் பங்குத்தொகைஅளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.நீலகிரி மண்டலத்தில், கூட்டுறவுத் துறை மூலம் 248 முழு நேர ரேஷன் கடைகள், 43 பகுதி நேர ரேஷன் கடைகள் செயல்படுகின்றன.இவ்வாறு, மண்டல இணைப்பதிவாளர் தயாளன் கூறியுள்ளார்.

**மஞ்சள் விலை குறையும்: வேளாண் பல்கலை தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2010,03:00 IST

கோவை:சில மாதங்களாக ஏறுமுகத் தில் இருந்த மஞ்சள் விலை, குறைய வாய்ப்புள்ளதாக கோவை வேளாண் பல்கலை தெரிவித்துள்ளது.கோவை, வேளாண் பல்கலை அறிக்கை: தமிழ்நாட்டிலும், இந்திய அளவிலும் ஒன்றரை ஆண்டுகளாக மஞ்சள் விலை உயர்ந்திருந்தது. ஏப்., 2009ல் ஒரு குவிண்டால் மஞ்சள் விலை 5,200 ரூபாயாக இருந்தது. ஏப்.,ல் 12 ஆயிரத்து 500 ரூபாயாகவும்,அக்.,ல் 14 ஆயிரம் ரூபாயாகவும் உயர்ந்தது.எதிர்காலத்தில் விலை உயருமா, குறையுமா என்பதைப் பொறுத்தே விவசாயிகள் இருப்பு வைப்பதா அல்லது விற்பனை செய்வதா

என் முடிவுகளை எடுப்பர். மஞ்சள் விலை மூன்று காரணிகளைப் பொறுத்து அமையும். ஜன., முதல் சந்தைக்கு வரும் மஞ்சள் வரத்து, தற்போதைய கையிருப்பு, அடுத்த ஆண்டுக்கான உள்நாடு மற்றும் ஏற்றுமதி தேவையைப் பொறுத்து விலைமாற்றம் இருக்கும். விவசாயிகள் சாகுபடிப்பரப்பை அதிகரித்துள்ளனர்.

புதிய மஞ்சள் சாகுபடி விவசாயிகள் உருவாகியுள்ளனர். தேசிய அளவில் சராசரியாக 45-50 லட்சம் மூட்டைகள் உற்பத்தி இருக்கும். ஆனால் வரும் 2011ல் 70 லட்சம் மூட்டைகளாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.இப்பருவத்தில் பாசன வசதி இருந்ததாலும், நல்ல விலை கிடைத்ததாலும் ஜன.,-பிப் மாதங்களிலேயே மஞ்சள் சாகுபடி துவங்கி விட்டது. எனவே, வரும் டிச., மூன்றாவது வாரத்தில் இருந்தே சந்தைக்கு புதுமஞ்சள் வரத்து துவங்கி விடும்.ஒரு கணக்கீட்டின் படி 5.5 லட்சம் மூட்டைகள் தற்போது இருப்பில் உள்ளன. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், கூட்டுறவு வேளாண் விற்பனை சங்கங்கள் மற்றும் வர்த்தகர்களிடம் ஒரு லட்சம் மூட்டைகள் உள்ளன. தமிழக விவசாயிகளிடம் நான்கு லட்சம் மூட்டைகள்; சாங்கிலி மற்றும் இதர சந்தைகளில் 75 ஆயிரம் மூட்டைகளும் இருப்பில் உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. தினமும் 6,000 மூட்டைகள் வரத்துள்ள ஈரோடு சந்தையில் 3,000 மூட்டைகள் வரையே விற்பனை செய்யப்படுகின்றன. வேளாண் பல்கலையில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத்திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் ஒரு ஆய்வில் ஈடுபட்டது.

ஈரோடு ஒழுங்குமுறைவிற்பனைக்கூடத்தில் 15 ஆண்டுகால விலை நிலவரத்தை ஆராய்ந்தது. இதன்படி, வரும் டிச., முதல் விலை குறையத்தொடங்கும் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.முன்பேர வர்த்தகத்திலும் மஞ்சள் விலை குறைந்துள்ளது. விலைசரிவு தொடரும் எனவும் தெரியவந்துள்ளது. எனவே, விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைப்பது மற்றும் விற்பனை செய்வது போன்ற முடிவுகளை, ஆய்வுகளின் அடிப்படையில் மேற் கொள்ளலாம். வெள்ளம், நோய்தாக்குதலால் மஞ்சள் சேதமடைய வாய்ப்பு குறைவு.இவ்வாறு, வேளாண் பல்கலை தெரிவித்துள்ளது.

**பொள்ளாச்சி நகராட்சியில் இயற்கை உரம் தயாரிப்பு "விறுவிறு'**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2010,03:18 IST

பொள்ளாச்சி:பொள்ளாச்சி நகராட்சியில் சேகரமாகும் குப்பையை பயன்படுத்தி இயற்கை உரம் தயாரிக்கும் பணி விறுவிறுப்பாக நடக்கிறது. ஒரு டன் குப்பையில் இருந்து 60 சதவீதம் இயற்கை

உரம் தயாரிக்கப்படுகிறது.பொள்ளாச்சி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் மக்கும் மற்றும் மக்காத குப்பை நல்லூர் அருகிலுள்ள நகராட்சி குப்பைக்கிடங்கில் தேக்கப்படுகிறது. பல ஏக்கர் பரப்பில் தேங்கியுள்ள குப்பை பராமரிப்பு இல்லாமல் வீணாகி வந்தது.இந்நிலையில், குப்பை கிடங்கில் தேக்கப்படும் குப்பையில் இருந்து இயற்கை உரம் தயாரிக்கவும், விவசாயிகளுக்கு விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டது. இயற்கை உரம் தயாரிக்கும் பணி தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்த அடிப்படையில் விடப்பட்டுள்ளது.மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று தரம் பிரிக்கவும், மக்கும் குப்பையில் சிறிய குப்பையை தனியாக பிரிக்கவும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

குப்பையில் இருந்து இயற்கை உரம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:பொள்ளாச்சி நகராட்சி குப்பை கிடங்கு 18 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. அதில், ஐந்து ஏக்கர் பரப்பில் குப்பையில் இருந்து உரம் தயாரிக்கும் திட்டத்திற்கு 20 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. சுமார் 15 கோடி ரூபாய் செலவில் செட் மற்றும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளது.நகராட்சி லாரிகள் மூலம் கொண்டு வரப்படும் குப்பையில் மக்கும் குப்பை தனியாக பிரிக்கப்படுகிறது. அதை கன்வேயர் மூலம் மிஷின் உள்ள பகுதிக்கு கொண்டு செல்லப்படுகிறது. இயந்திரத்தின் உள்பகுதியில் குப்பை சுழற்றப்பட்டு, 120 மில்லிமீட்டர் அளவுள்ள குப்பைகள் தனியாக பிரிக்கப்படுகிறது.

அதில், 120 மில்லிமீட்டர் அளவை விட பெரிதாக உள்ள குப்பைகள் தனியாக கழிக்கப்படுகிறது. ஜலிக்கப்பட்ட குப்பையை திறந்த வெளியில் கொட்டி சுத்தகரிக்கப்படுகிறது. அதன்பின், 45 நாட்களுக்கு குப்பை மக்க வைக்கப்படுகிறது.மக்கிய குப்பையில் பிளாஸ்டிக் மற்றும் பாட்டில் கழிவுகள் நீக்கி மறுபடியும் சுழற்சி முறையில் இயந்திர ஜல்லடை கொண்டு ஜலிக்கப்படுகிறது. அதில், நான்கு மில்லி மீட்டருக்கு கீழுள்ள குப்பை இயற்கை உரமாக தனியாக வந்து விடும். மீதமுள்ள குப்பை கழிவு செய்யப்படும்.

இந்த முறையில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உரம் ஒரு டன் மூவாயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. தேவைக்கு ஏற்ப 10, 25 கிலோ பேக்கிங் செய்தும் விற்கப்படுகிறது. விவசாயிகள் வாகனங்கள் கொண்டு வந்தால் டன் கணக்கில் அப்படியே விற்கப்படுகிறது.பொள்ளாச்சி நகராட்சியில் இருந்து தினமும் சராசரியாக 50 டன் குப்பை கிடைக்கிறது. அதில், 60 சதவீத குப்பை இயற்கை உரம் தயாரிக்க உகந்ததாக உள்ளது. அதிலிருந்து 20 சதவீதம் இயற்கை உரமாக கிடைக்கிறது. இயற்கை உரம் தயாரிக்க ஐந்து ஏக்கர் பரப்பில் 15 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.சாக்கடை கழிவுகள், அழுகிய காய்கறிகள், பொருட்களில் இருந்து இயற்கை உரம் தயாரிப்பதால் விவசாயத்திற்கு சிறந்த தொழு உரமாக

இருக்கும். இயற்கை உரம் தயாரித்து விற்கபட்டாலும் முறையாக துவக்க விழா நடத்தவில்லை. விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்புடன் குப்பையில் இருந்து இயற்கை உரம் தயாரித்து விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும்.

இவ்வாறு, அதிகாரிகள் தெரிவித்தனர்.நகராட்சி சுகாதார அதிகாரிகள் கூறுகையில், "பொள்ளாச்சி நகராட்சியில் 36 வார்டுகளில் இருந்து தினமும் 55 முதல் 60 டன் குப்பை கிடைக்கிறது. குப்பையில் இருந்து உரம் தயாரிக்கும் நிறுவனத்தார் ஒரு டன் குப்பைக்கு 25 ரூபாய் கட்டணம் செலுத்துகிறார்கள். நகராட்சி நிர்வாகத்திடம் செய்து கொண்ட ஒப்பந்தப்படி 20 ஆண்டுக்கு பிறகு இந்த தொழிற்சாலையை இயந்திரத்துடன் நகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும். அதுவரை ஏக்கருக்கு 500 ரூபாய் வீதம் ஆண்டுக்கு 2,500 ரூபாய் வாடகை செலுத்த வேண்டும்' என்றனர்.

**அந்தியூர் விவசாயிகள் துவரை பயிரிடுவதில் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2010,01:37 IST

ஈரோடு: துவரம் பருப்பு விலை ஏற்றத்தின் எதிரொலியாக, நடப்பாண்டு அந்தியூர் சுற்று வட்டார பகுதி விவசாயிகள் துவரை சாகுபடியில் ஆர்வம் காட்டியுள்ளனர். சென்ற காலங்களில் அந்தியூர் சுற்று வட்டார விவசாயிகள் ராகி, கம்பு, துவரை, சோளம் போன்ற குறுகிய கால பயிர்கள் பயிரிடப்பட்டு வந்தனர். புதிய, புதிய நெல் ரகங்களின் வரவாலும், புதிய முறையில் அதிகப்படியான மகசூல் ஆகியவற்றாலும் சத்துமிக்க உணவு பொருட்களை முழுமையாக தவிர்த்து விட்டனர். அதே போல, துவரை பயிரிடுவதிலும் ஆர்வம் காட்டாமல் இருந்தனர்.

சென்றாண்டு துவரம் பருப்பு விலை உயர்வு எதிரொலியால், நடப்பாண்டு அந்தியூர் சுற்று வட்டார விவசாயிகள் துவரை சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆடி மாதத்தில் அந்தியூர், மைக்கேல்பாளையம், எண்ணமங்கலம், வட்டக்காடு, பட்லூர், தாளபாளையம், வெள்ளித்திருப்பூர் போன்ற பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் துவரை விதைத்தனர். ஏழு மாத பயிரான துவரை நிலக்கடலை, சோளம், கம்பு ஆகிய பயிர்களோடு ஊடுபயிராகவும், தனியாகவும் பயிர் செய்யப்படுகின்றன. துவரை சாகுபடியில் ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வரை செலவாகிறது. சரியான பராமரிப்பு, உரிய நேரத்தில் மருந்து தெளித்தால் நோய் தாக்கும் அபாயத்திலிருந்து தப்பிக்கலாம். மழையின் அதிகப்படியான ஈரப்பதத்தின் காரணமாக, 17 டிகிரி செ. கிரேட்

வெப்பநிலையிருந்து, 29 வரை உள்ள வெப்பநிலையில் நோய் தாக்கும் அபாயம் உள்ளது. இலை கருகல் நோய் மற்ற செடிகளையும் பாதிக்காத வண்ணம் மருந்து தெளிக்கும் போது காப்பாற்ற முடியும். நல்ல முறையில் பராமரிக்கப்படும் துவரை சாகுபடியில், ஒரு ஏக்கருக்கு, ஏழு மூட்டை (நூறு கிலோ மூட்டையில்) வரை மகசூல் கிடைக்கும். ஏழு மூட்டை பருப்பை உடைக்கும்போது, நான்கு மூட்டை பருப்பு கிடைக்கும். தை மாதத்தில் அறுவடைக்கு தயாராகும் துவரை, அந்தியூர், வெள்ளத்திருப்பூர் சுற்று வட்டார பகுதியில் நுற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளன. உடைக்காத பருப்பை ஒழுங்குமுறை விற்பனை மையத்துக்கு கொண்டு செல்லும் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது.

**கோடியக்கரை பகுதியில் களைகட்டும் நண்டு சீசன்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 05,2010,23:42 IST

வேதாரண்யம்: வேதாரண்யம் அடுத்த கோடியக்கரையில் நண்டு பெருமளவில் கிடைப்பதால் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த கோடியக்கரையில் இரண்டு வாரங்களாக நண்டு சீசன் துவங்கியுள்ளது. இங்கு தூத்துக்குடி, ராமநாபுரம், கடலூர், கன்னியாகுமாரி மற்றும் நாகையை சேர்ந்த மீனவர்கள் 1,000க்கும் மேற்பட்ட மீனவர்கள் இங்கு தங்கி மீன் பிடித்து வருகின்றனர். கடந்த செப்டம்பர் மாதம் துவங்கிய மீன் பிடி சீசன் மார்ச் வரை தொடரும். இங்கு நாள்தோறும் காலா, வாவல், சீலா போன்ற உயர்தர மீன்களும், இறால், நண்டுகள் அதிகளவில் கிடைக்கிறது.

கடந்த இரண்டு வாரங்களாக நீலக்கால் நண்டு, புள்ளி நண்டு அதிகளவில் மீனவர்களுக்கு கிடைத்து வருகிறது. தினமும் 3,000 கிலோ முதல் 5,000 கிலோ வரை நண்டு பிடிக்கப்படுகிறது. நீலக்கால் நண்டு ஒரு கிலோ 130 ரூபாய்க்கும், புள்ளி நண்டு கிலோ 80 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இங்கு இந்த நண்டுகள் அதிளவில் கிடைப்பதால் கோடியக்கரையில் கிடைக்கும் நண்டுகள் அவிக்கப்பட்டு, பின் சுத்தம் செய்யப்பட்டு அதன் சதை பகுதிகள் ஐஸ்கிரீம் மற்றும் கேக் தயாரிப்புக்காக ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா மற்றும் சிங்கபூருக்கும் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.நண்டு சீசன் களைகட்டியிருப்பதால் வேதை, கோடியக்கரை பகுதி மீனவர்கள் உற்சாகத்தில் உள்ளனர்

**நெல் பயிருக்கு காப்பீடுசெய்ய வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 05,2010,21:34 IST

ராமநாதபுரம்:மாவட்டத்தில் தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் நெல் பயிருக்கும் காப்பீடு செய்ய வலியுறுத்தப்பட்டுள்ளது. நெல் பயிர் இயற்கை இடர்பாடு காரணமாக பாதிக்கப்படுவது மாவட்டத்தில் தொடர்கதையாக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் கடன் பெறா விவசாயிகள் காப்பீடு செய்ய டிச., 15 வரை காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் காலக்கெடு முடியும் வரை காத்திருக்காமல் அருகில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பிரிமியர் தொகை செலுத்தலாம். நெல் சம்பா பருவத்தில் சாகுபடி செய்யும் பயிர்களுக்கு ஏக்கருக்கு அதிகபட்சமாக 13 ஆயிரத்து 24 ரூபாய் காப்பீடு செய்யலாம். இதற்கு இரண்டு சதவீதம் பிரிமியத்தொகை செலுத்த வேண்டும். சிறுகுறு விவசாயிகளுக்கு 55 சதவீதம் தமிழக அரசே பிரிமியம் செலுத்துகிறது. சிறுகுறு விவசாயிகள் ஏக்கருக்கு 117 ரூபாய் செலுத்தினால் போதும். இதர விவசாயிகள் 130 ரூபாய் செலுத்த வேண்டும். வேளாண் இணை இயக்குனர் சத்தியமூர்த்தி கூறியதாவது:குறிப்பிட்ட பிரிமியத்தொகையை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் செலுத்தி விவசாயிகள் பயன்பெற முன்வர வேண்டும், என்றார்.

**சங்கராபுரம் பகுதியில் 9,000 ஏக்கரில்சம்பா நெல் சாகுபடி பணிகள் துவக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 05,2010,23:52 IST

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் 9 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சம்பா சாகுபடி பணிகள் துவங்கியது.இது குறித்து வேளாண்மை உதவி இயக்குனர்(பொறுப்பு) ஆனந்தன் கூறியதாவது:சங்கராபுரம் பகுதியில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்துள்ளதால் விவசாயிகள் சம்பா சாகுபடி பணியை துவக்கி உள்ளனர். சங்கராபுரம் வட்டத்தில் தற்போது 9,000 ஏக்கர் பரப்பில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டுள் ளது. இதில் 2,000 ஏக்கர் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1 ஏக்கருக்கு 3,000 ரூபாய் மானியம் வழங்கப் படுகிறது. மேலும் 3 கிலோ விதை, நுண்ணுரம், நீலப் பச்சை பாசி, கோனா வீட்டர், மார்க்கர் ஆகிய இடுபொருட்கள் மானியமாக வழங்கப்படுகிறது.தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1 ஏக்கருக்கு 3000 ரூபாய் மானியமாக வழங் கப்படுகிறது. சங்கராபுரம் வேளாண்மை அலுவலகத்தை தொடர்பு கொண்டு விவசாயிகள் பயன்பெறலாம்.இவ்வாறு உதவி இயக்குனர் ஆனந்தன் கூறினார்.

**வாழைத்தார் ரூ.80 ஆயிரத்துக்கு ஏலம்: விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 05,2010,23:26 IST

நாமக்கல்: ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 80 ஆயிரம் ரூபாய்க்கு வாழைத்தார் ஏலம் விடப்பட்டது விவசாயிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாமக்கல் வேளாண் உதற்தியார்கள் கூட்டு விற்பனைச் சங்கம் மூலம் ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ஒவ்வொரு வாரம் புதன் கிழமையன்று வாழைத்தார் ஏலம் நடத்தப்படுகிறது. அதன்படி இந்த வாரம் நடந்த ஏலத்தில் ஒருவந்தூர் அதன் சுற்றுவட்டார கிராமப்புறங்களைச் சேர்ந்த வாழை விவசாயிகள் பலர் பங்கேற்றனர். அதில் வாழைத்தார் அதிகபட்ச விலையாக 185 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தம் 80 ஆயிரம் ரூபாய் மதிப்பில் வாழைத்தார் ஏல முறையில் விற்பனை செய்யப்பட்டது. வாழைத்தார் விலையேற்றம் விவசாயிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

**"ராஜராஜன் 1000' நெல் சாகுபடி செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 05,2010,23:22 IST

ப.வேலூர்: "ராஜாராஜன் 1000' நெல் சாகுபடி குறித்த விவசாயிகளுக்கு வயல்வெளி செயல்விளக்க பயிற்சி முகாம், ப.வேலூர் அடுத்த கபிலர்மலை வட்டாரம் பிலிக்கல்பாளையத்தில் நடந்தது. மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சிவராஜ் தலைமை வகித்தார். துணை வேளாண் இயக்குனர் பிரபாகரன், உழவர் பயிற்சி நிலைய துணை வேளாண் இயக்குனர் நடராஜ், தரக்கட்டுப்பாட்டு உதவி வேளாண் இயக்குனர் துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ராஜராஜன் 1000 நெல் சாகுபடி குறித்து அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியருக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், அதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு பேரணியும் நடத்தப்பட்டது.
நிகழ்ச்சியில், அரசு அலுவலர்கள், சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், மாணவ, மாணவியர் உள்பட 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை வட்டார வேளாண் விரிவாக்க மைய வேளாண் அலுவலர்கள் செய்திருந்தனர்.

**மாவுப்பூச்சி மேலாண்மை முறை திட்டம் விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 05,2010,23:13 IST

குளித்தலை: தோகமலை அருகே புரசம்பட்டியில் வேளாண் அறிவியல் மையம், வேளாண் துறை இணைந்து "ஆத்மா' திட்டத்தில் மரவள்ளியில் மாவுப்பூச்சி மேலாண்மை முறை குறித்த செயல்முறை விளக்கம் முகாம் நடந்தது. தோகமலை வட்டார வேளாண் உதவி இயக்குனர் காதர் மொகைதீன் தலைமை வகித்து பேசியதாவது: 10 ஆண்டு முன்வரை அதிக சேதம் ஏற்படுத்தாத இரண்டாம்நிலை பூச்சியாக மாவுப்பூச்சி இருந்தது. தற்போது மரவள்ளி, சூரியகாந்தி, கொய்யா என அனைத்து வகை பயிரிலும் மகசூல் இழப்புக்கு காரணமாக முதல்நிலை பூச்சியாகியுள்ளது. விவசாயிகள் ஒரே நேரத்தில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

பயிர் பாதுகாப்பு துறை தொழில்நுட்ப வல்லுனர் விஜய் பேசியதாவது: மெக்ஸிகோ நாட்டில் இருந்து இந்தியா வந்தவை மாவுப்பூச்சி இனம். பப்பாளியில் இவை முதலில் தோன்றியது. வெப்பமுடைய காலமே இவை பெருக்கத்துக்கு சாதகமான சீதோஷண நிலை. முட்டையாகவோ, செலற்ற பூச்சியாவோ குளிர் காலத்தில் கழிக்கின்றன. மரவள்ளியின் இலை, தண்டு மற்றும் வேர் பகுதியில் சேதத்தை ஏற்படுத்துகிறது. இலைகள் சுருங்கி, வளர்ச்சி தடைபடுகிறது. செடியின் சாறு தொடர்ந்து உறிஞ்சப்படுவதால் இலைகள் மஞ்சள் நிறமாகி வாடிவிடுகிறது. மாவுப்பூச்சி மீது மெழுகு படிவம் உள்ளதால் பூச்சி மருந்து மட்டுமே கட்டுப்படுத்துவது கடினம்.

உழவியல் முறை, உயிரியல் கட்டுப்பாடு மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்தும் மூன்று முறைகளில் இவற்றை கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு அவர் கூறினார். வேளாண் அறிவியல் மையம் தொழில்நுட்ப வல்லுனர் தமிழ்செல்வி, வேளாண் துணை அலுவலர் கண்ணதாசன், உதவி அலுவலர் இளங்கோவன் மற்றும் பலர் பங்கேற்றனர். பங்கேற்ற விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

**முல்லை சாகுபடி அமோகம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 05,2010,00:00 IST

விழுப்புரம்: திருவெண்ணெய் நல்லூர் அடுத்த மேல்தனியாலம்பட்டி, குச்சிப்பாளையம், பொய்கை அரசூர், டி.குமாரமங்கலம் கிராமங்களில், 150 ஏக்கரில் முல்லைப்பூ ஆண்டுதோறும் ஏப்ரல் முதல் நவம்பர் வரை சாகுபடி செய்யப்படுகிறது.  ஒரு ஏக்கரில் 30 கிலோ பூக்கள் வீதம், தினசரி 4

ஆயிரத்து 500 கிலோ முல்லைப் பூக்கள் பறிக்கப்படுகின்றன. இந்த பூக்களை பண்ருட்டி, அரசூர், விழுப்புரம், திருக்கோவிலூர், சங்கராபுரம் போன்ற பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர். சாதாரண நாட்களில் ஒரு கிலோ 80 முதல் 100 ரூபாய் வரையிலும், பண்டிகை நாட்களில் 300 ரூபாய் வரையிலும் விற்கப்படுகிறது.

**மேட்டூர் அணையில் "மீன்வேட்டை'**

பதிவு செய்த நாள் : நவம்பர் 05,2010,00:00 IST



சேலம்: மேட்டூர் அணையில் இருந்து பாசன வசதி மட்டுமல்லாமல், மின்சாரம் எடுப்பது, மீன் வளர்ப்பது என பல்நோக்கு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இந்த அணையில், கட்லா, ரோகு உள்ளிட்ட பல்வேறு வகையான மீன் குஞ்சுகள், லட்சக்கணக்கில் விடப்படுகின்றன. இவை வளர்ந்தவுடன், பிடிக்கப்பட்டு, அங்குள்ள கூட்டுறவு சங்கத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. மேட்டூர் அணை மீன்களுக்கு கோல்கட்டாவில் கிராக்கி அதிகம். மேட்டூரில், மீன்பிடி தொழிலில் ஏராளமான மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். தென்மேற்கு பருவமழை போதிய அளவில் பெய்யாததால், இந்த ஆண்டு மேட்டூர் அணையில் நீர் மட்டம் குறைவாக உள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி மீனவர்கள் பரிசலில் சென்று அதிகளவில் மீன்களை பிடித்து வருகின்றனர்.

**இஞ்சி விவசாயிகள் சோகம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 05,2010,00:00 IST

நீலகிரி: கூடலூர், பந்தலூர் பகுதிகளில் காபி, குறுமிளகு, இஞ்சி, மஞ்சள், மரவள்ளிக் கிழங்கு, நேந்திரன் வாழை போன்றவை பயிராகின்றன. தற்போது, அதிக லாபம் தரும் இஞ்சியை பயிர்

செய்வதில் இப்பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர். கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில், 60 கிலோ கொண்ட இஞ்சி மூட்டை 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டிலும் நல்ல லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து அதிகளவில் இஞ்சி பயிரிடப்பட்டது. ஆனால், நோய் தாக்குதல் காரணமாக இஞ்சி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. நோய் தாக்கப்பட்ட இஞ்சி, 60 கிலோ மூட்டை 750 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் இந்த ஆண்டு இஞ்சி பயிரிட்ட விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *காவை மாவட்டத்தில் பெய்துவரும் தொடர் மழையால் குளம்–அணைகளில் நீர்மட்டம் கிடு,கிடு உயர்வு சிறுவாணி அணை நிரம்புவதற்கு இன்னும் 4 மீட்டர் உள்ளது*

*கோவை,நவ.7–*

*கோவை மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் குளங்கள், அணைகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. சிறுவாணி அணை நிரம்புவதற்கு இன்னும் 4 மீட்டர் உள்ளன.*

*கோவையில் தொடர் மழை*

*கோவை மாவட்டம் முழுவதும் கடந்த ஒரு வார காலமாக பரவலாக மழை பெய்து வருகிறது.இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை தொடங்கி நேற்று காலை வரை பலத்த மழை பெய்தது. வால்பாறை பகுதியில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் அந்த பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்தது. அதிக பட்சமாக வால்பாறை பகுதியில் 78 மி.மீட்டர் மழை பதிவானது.*

*கோவை நகரப்பகுதியிலும் நேற்று முன்தினம்காலையில் இருந்தே வானம் மப்பும் மந்தாரத்துடன் காணப்பட்டது. திடீரென கறுத்த மேகங்கள் சூழ்ந்து இடி–மின்னலுடன் கனமழை பெய்யத்தொடங்கியது. மதியம் இடைவெளி விட்ட மழை மாலையில் கொட்டி தீர்த்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் ரோடுகளில் வெள்ளம் தேங்கி ஆறாக ஓடியது. நேற்றும் காலையில் இருந்த கருமேகங்கள் சூழ்ந்து காணப்பட்டது. சில இடங்களில் மழைச்சாரல் இருந்தது.*

*சிறுவாணி அணை நிரம்புகிறது*

*மற்றும் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய பகுதிகளான நாயக்கன்பாளையம், கோவனூர், பிளிச்சி குரும்பாளையம், அசோகபுரம், தடாகம் உள்ளிட்ட 30–க்கும் மேற்பட்ட கிராமங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. பலத்த மழை காரணமாக பெரியநாயக்கன்பாளையத்தை அடுத்த கருங்குட்டை, குஞ்சாம்பாளையம் குட்டை புதூர் பள்ளம், அண்ணன்–தம்பி பள்ளம் ஆகிய குளங்களில் நீர் நிரம்பி காணப்படுகிறது. மழை காரணமாக நொய்யல் ஆற்றிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.*

*இதுபோல் கோவையில் உள்ள உக்கடம் பெரியகுளம், வாலாங்குளம், குறிச்சிகுளம், முத்தணங்குளம், பேரூர் குளம், உள்ளிட்ட அனைத்து குளங்களிலும் நீர்மட்டம் கிடு,கிடுவென கூடி உள்ளது. கோவைக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி அணையின் மொத்த கொள்ளவு 878.5 மீட்டர் ஆகும். தற்போது பெய்து வரும் பலத்த மழை காரணமாக 874 மீட்டராக உயர்ந்துள்ளது. இந்த அணை நிரம்புவதற்கு இன்னும் 4 மீட்டர்கள்தான் உள்ளன. இது தவிர பில்லூர் அணை நிரம்பி விட்டது.*

*மழை அளவு*

*கோவை மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:– கோவைபீளமேடு–40.5 மி.மீ, அன்னூர்–3 மி.மீ, பெரிய நாயக்கன்பாளையம்–6 மி.மீ, சூலூர்–17 மி.மீ, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்–31.4மி.மீ, சின்னக்கல்லார்–46 மி.மீ, சின்கோனா–85மி.மீ, சோலையார் அணைப்பகுதி–9 மி.மீ, சிறுவாணி அணையின் மேற்பகுதி–10 மி.மீ, சிறுவாணி அடிவார–4 மி.மீ, கோவை தெற்கு தாலுகா–25.3 மி.மீ. பொள்ளாச்சி–5 மி.மீ ஆகும்.*

*கோவையில் கடந்த சில நாட்களாக பெய்த மழையால் உக்கடம், சி.டி.சி, ஜி.எம் நகர் பகுதிகளில் வெள்ளம் புகுந்தது. இதனால் அந்த பகுதி மக்களின் அன்றாடவாழ்க்கை பாதித்தது. வீடுகளுக்குள் தேங்கிய மழை நீரை பாத்திரங்களில் எடுத்து வெளியேற்றினர். மழை காரணமாக சித்தாபுதூரில் உள்ள ஒரு வீடு இடிந்தது. மழையால் பாதிக்கப்பட்ட ஜி.எம்.நகரில் தா.மலரவன் எம்.எல்.ஏ நேரில் சென்று பார்வையிட்டார்.*

## இந்தோனேஷியாவின் போட்டியால் பாதிப்பு காபி ஏற்றுமதியாளர்கள் புதிய சந்தைகளில் கவனம்



அருண் ஐயர்

பெங்களூர்

ஜப்பான் நாட்டு சந்தைகளில், இந்தியாவின் ரோபஸ்டா ரக காபியின் விலை அதிகமாக உள்ளது. எனவே ஜப்பான் நாட்டு ஆர்டர்கள் இந்தோனேஷியாவுக்கு திரும்பியுள்ளன. இது இந்திய காபி ஏற்றுமதியாளர்களுக்கு சிறிது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஜப்பான் தவிர்த்த புதிய சந்தைகளில் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் இந்திய நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

ரோபஸ்டா விற்பனை

சர்வதேச சந்தையில் 40,000 டன் சுத்திகரிக்கப்பட்ட ரோபஸ்டா விற்பனை செய்யப்படுகிறது. இதில் இந்தியாவின் பங்களிப்பு 40 சதவீதமாக உள்ளது. கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில் நம் நாட்டில் ரோபஸ்டா காபி உற்பத்தி 10,000 டன் குறைந்தது. இதனால் அளிப்பு குறைந்து விலை உயரத் தொடங்கியது. ஜப்பான் நாட்டு ஆர்டர்கள் இந்தோனேஷியாவுக்கு சென்று விட்ட நிலையில் இத்தாலி தொடர்ந்து இந்தியாவிலிருந்து ரோபஸ்டா காபியை வாங்கி வருகிறது.

நறுமணம் கொண்ட இந்திய ரோபஸ்டா பல நாடுகளில் இன்ஸ்டன்ட் காபித் தூள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் சுத்திகரிக்கப்பட்ட ரோபஸ்டா ஏற்றுமதி 16,353 டன்னாக இருந்தது. நடப்பு நிதி ஆண்டில் இது 28,000 டன்னைத் தாண்ட வாய்ப்புள்ளது என இந்திய காபி ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் ரமேஷ் ராஜா தெரிவித்தார்.

உலகில் வியட்நாம் நாடுதான் ரோபஸ்டா காபி உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. அங்கு ஆண்டுக்கு 1.80 கோடி மூட்டை ரோபஸ்டா காபியை உற்பத்தி செய்கிறது (ஒரு மூட்டை 60 கிலோ). ரோபஸ்டா காபி ஏற்றுமதியை வியட்நாம் பெரிதும் குறைத்துக் கொண்டுள்ளது. இது தற்காலிகமாக இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு சாதகமாக அமைந்துள்ளது.

சர்வதேச காபி அமைப்பின் மதிப்பீட்டின்படி, சென்ற செப்டம்பர் மாதத்துடன்

*நிறைவடைந்த பருவத்தில் இந்தியாவின் காபி ஏற்றுமதி 60 சதவீதம் உயர்ந்து 2.71 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய பருவத்தில் 1.78 லட்சம் டன்னாக இருந்தது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் 70 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.*

*இலக்கு*

*நடப்பு முழு நிதி ஆண்டில், 2.10 லட்சம் டன் காபி (ரோபஸ்டா+அராபிகா) ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்ற முழு நிதி ஆண்டில் நம்நாட்டிலிருந்து 2.04 லட்சம் டன் காபி ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டது. முதல் ஆறு மாத காலத்தில் காபி ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளதையடுத்து நடப்பு நிதி ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி இலக்கை சுலபமாக எட்ட முடியும் என காபி வாரியம் மேலும் தெரிவித்துள்ளது.*

## பொக்காபுரம் பகுதியில் கால்நடை பாதுகாப்பு திட்டம் தொடக்கம்

*மசினகுடி, நவ.7–*

*மசினகுடி அருகே உள்ள பொக்காபுரம் பகுதியில் தமிழக அரசின் கால்நடை பாதுகாப்பு திட்டம் தொடங்கப்பட்டது. நிகழ்ச்சியில் சிறந்த கறவை மாடுகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.*

*கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்*

*தமிழகம் முழுவதும் உள்ள கால்நடைகளை பாதுகாக்கும் வகையில் தமிழக அரசு கால் நடை பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்த நிலையில் இந்த திட்டம் மசினகுடி அருகே உள்ள பொக்காபுரம் பகுதியில் தொடங்கப்பட்டது.*

*இதன் தொடக்க விழா வுக்கு ஊட்டி கால்நடை துறை உதவி இயக்குனர் ஜோசப் டிக்சன் தலைமை தாங்கினார். மசினகுடி கால்நடை டாக்டர் அன்பழகன் முன்னிலை வகித்தார்.*

*சிகிச்சை*

*திட்டத்தில் கால் நடைகளுக்கு குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், கருப்பகுதி சோதனை, கரு தடுப்பூசி, மலட்டுத்தன்மை நீக்குதல் போன்றவைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.*

*நிகழ்ச்சியில் ஆரோக்கி யமான பசுமாடு மற்றும் கன்றுக்குட்டிகள் வளர்த்த*

ஆதிவாசிகளுக்கு பரிசுகள் வழங்க பட்டது. பொக்காபுரம் கவுன்சிலர் சரோஜா பரிசு களை வழங்கினார்.

கால்நடைகளான மாடு, எருமை போன்றவைகளை வளர்க்க ஆர்வம் ஏற்படுவ தற்காகவும், வளர்க்கப்படும் கால்நடைகளை நல்ல முறையில் பராமரிக்கவும் இந்த பரிசுகள் வழங்கப்பட்டது.நிகழ்ச்சியில் மசினகுடி கால் நடை துறை பராமரிப்பு உதவியாளர்கள் நாராயணன், உச்சி மற்றும் டிரைவர் லட்சுமணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பயன்

இந்த கால்நடை பாதுகாப்பு திட்டம் மசினகுடி பகுதியில் உள்ள செம்மநாத்தம், பொக்காபுரம், மாயார் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தில் தற்போது வரை சுமார் 500–க்கும்மேற்பட்டோர் கால் நடை வளர்த்து வருபவர்கள் பயன் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மஞ்சூர் பகுதியில் உருளைக்கிழங்கு அறுவடை பணியில் விவசாயிகள் தீவிரம்



மஞ்சூர் பகுதியில் உருளைக்கிழங்கு அறுவடை பணியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள்.

மஞ்சூர், நவ.7–

மஞ்சூர் பகுதிகளில் உருளைக்கிழங்குகள் அறுவடை செய்யும் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வரு கிறார்கள்.

உருளைக்கிழங்கு விவசாயம்

நீலகிரி மாவட்டத்தில் முக்கிய தொழிலான பச்சை தேயிலை சாகுபடிக்கு, அடுத்த படியாக காய்கறி விவசாயத்தில் விவசாயிகள் ஈடுபட்டு வருகிறார்கள்.

காய்கறி விவசாயத்தில் முக்கியமாக உருளைக்கிழங்கு, கேரட் ஆகிய விவசாயம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகிறது. நீர்போகம், கடை போகம், கார்போகம், ஆடி போகம் ஆகியவற்றில் விவசாயிகள் காய்கறி விவ சாயத்தில் ஈடுபடுகிறார் கள்.

அறுவடை தீவிரம்

கடந்த ஆடிபோகத்தில் நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழஙகு, கேரட் போன்ற காய்கறிகளை பயிரிட்டு வந்தனர். இந்த நிலையில் இதே போகமான தற்போது குறிப்பாக உருளைக் கிழங்கு சாகுபடியில் பெரும் பாலான விவசாயிகள் ஈடுபட் டுள்ளனர். உருளைக் கிழங்கு கள் தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. மஞ்சூர் பகுதிகளில் உருளைக்கிழங்கு அறுவடை யில் விவசாயிகள் ஈடுபட்டு வருகிறார்கள்.அறுவடை செய்யப்படும் உருளைக் கிழங்குகளை மேட்டுப் பாளையத்திற்கு பெரும் பாலான விவசாயிகள் எடுத்து சென்று விற்பனை செய்து வருகிறார்கள்.

போதுமான விலை இல்லை

உருளைக்கிழங்கு தற்சமயம் ஒரு துண்டு (45 கிலோ மூடை) அதிகபட்சமாக ரூ.550 முதல் ரூ.600 வரை விற்பனை யாகிறது. இந்த விலை விவ சாயிகளுக்கு போதுமானதாக இல்லை.

இந்த விலையால் எந்தவித லாபமும் கிடைப்பது இல்லை என்று விவசாயிகள் குமுறுகின்றனர். குறைந்த பட்சம் ஒரு துண்டு உருளைக் கிழங்கு ரூ.900 வரை கிடைத்தால் ஓரளவு கட்டுப் படியாகும் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.